உ

சிவமயம்

" மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை, ஆழமே அருள் அரசே போற்றி "

# செழுங்கிளை தாங்கிய செல்லையர் தம்பதிகள்

## கோப்பாய் — சண்டிலிப்பாய்

# வாழ்க்கை வரலாறு

தொகுத்தோன் :

சி. முத்துத்தம்பி

83, அரசடி வீதி, வண். வட—கிழக்கு,

யாழ்ப்பாணம்.

1988

(குடும்பத்தினர்க்கு தொகுத்தோனின் அன்பளிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை, ஆழமே அருள் அரசே போற்றி "

# செழுங்கிளை தாங்கிய செல்லையர் தம்பதிகள்

## கோப்பாய் — சண்டிலிப்பாய்

# வாழ்க்கை வரலாறு


தொகுத்தோன் :

சி. முத்துத்தம்பி

83, அரசடி வீதி, வண். வட-கிழக்கு,

யாழ்ப்பாணம்.



1988

(குடும்பத்தினர்க்கு தொகுத்தோனின் அன்பளிப்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. மா. வ. செல்லையா
(1881 — 1947)
(இளைப்பாறிய நீதிமன்ற துவிபாஷகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி விஜயலட்சுமி அம்மாள்
செல்லையா
(1897 — 1949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# செழுங்கிளை தாங்கிய செல்லையர் தம்பதிகள்

## கோப்பாய் — சண்டிலிப்பாய்

மானாமுதலியார் - வயித்திலிங்கம் - செல்லையா அவர்கள் கோப்பாயூர் மானாமுதலியார் (Don Philippu Mana Mudaliyar — 1760) வழிவந்தவரான சின்னத்தம்பி வயித்திலிங்கம் அவர்களினதும், அதே மரபினரான வள்ளியம்மையினதும் மூன்றும் புதல்வராக 14-6-1881இல் தென்கோவையில் பிறந்தார்.

முன்னோரைப் பிரதிபலிக்கும் வகையில் இவருக்குப் பெற்றோர் மானாமுதலியார் என்றே நாமம் சூட்டினர். உத்தியோகம் ஆகும்வரையில் மானாமுதலியார் என்றே வழங்கலானார். பின்னர் மானாமுதலியார் — வயித்திலிங்கம் — செல்லையா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மலாயாவில் பொதுவாக "துப்பாசியார்" என மதிப்போடு அழைக்கப்பட்டவர்.

ஆரம்பக் கல்வி கோப்பாய் நாவலர் வித்தியாசாலையிலும், அதைத் தொடர்ந்து கோப்பாய் கிறீஸ்தவ ஆங்கிலப்பள்ளியிலும், மேல் வகுப்புக்களை யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியிலும் (St. John's College, Jaffna) கற்கலானார். 1900த்தில் கல்கற்று என்றன்ஸ் (Calcutta Entrance) பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தி எய்தினர். இத் திறமையை மெச்சி கல்லூரி அதிபர் இவருக்கு சேக்ஸ்பியரின் கவிதைத் திரட்டு ஒன்றை (Complete Works of William Shakespear: De–Lux Edition) அன்பளிப்புச் செய்தார்.

இந்த அளவில் படிப்பை முடித்துக்கொண்டு உத்தியோகம் தேடி ஐக்கிய மலாய் நாடு செல்வாராயினர். இக்காலத்தில் யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்குப் புகையிரத வசதி இல்லை. காங்கேசன்துறையிலிருந்து கப்பலில் செல்லும் காலம். அங்கிருந்து மலாய் நாட்டிற்கு ஒரு கிழமை கப்பல் பிரயாணம். இவ்வாறு ஐக்கிய மலாய் நாட்டைச் சேர்ந்த பேரா (Perak) மாகாணத்துத் தலைநகரான ரைப்பிங் (Taiping) சென்றடைந்து, அங்குள்ள சக்கடத்தார் காரியாலயத்தில் லிகிதராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். 1903இல் நடத்தப்பட்ட உயர் பிரிவுச் சோதனையில் உயர் ஸ்தானத்தையும் பெற்றார். (Senior Grade Examination – Remarks — Very Good — 2nd out of 86 Candidates).

குறுகியகாலத்தில் இவரின் மேற்படி சித்தியையும், ஆங்கில அறிவையும், அச்சடிக்கும் திறமையையும் கவனத்தில்கொண்டு இவரை ஆங்கில அரசாங்க அதிபரின் (Honourable British Resident of Perak) பிரத்தியேக லிகிதராகத் தெரிந்து அன்னாரது மாளிகையில் கடமையாற்ற வைத்தனர். இளைஞரான இவருக்கு இப் பதவி கிடைத்தது. யாழ்ப்பாணத்தவரான உத்தியோகஸ்தருக்கு ஒரு பெருமை. முதியோரும் இவரைக் கண்ணியமாக நடத்தினர். கௌரவ றெசிடன் சுற்றுலா போகும்போது, அவருடன் கூடச் செல்வதும், அவரின் பிரத்தியேக விடுதியில் தங்குவதும் வழமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுகாலத்தின்பின் நீதிமன்ற துவிபாஷகர் பதவியை விரும்பி, மாற்றம்பெற்று பத்துக்காசா நீதிமன்றத்தில் கடமையாற்றத் தொடங்கினர். அங்கு பஞ்சாபி மொழி பேசவும் எழுதவும் கற்று, தமிழ் — பஞ்சாபி துவிபாஷகராகக் கடமையாற்றினர். இன்னும், ஆங்கிலமொழியில் உயர்தர சோதனையும் (English Honours standard) சித்தி யெய்தி இவைக்குரிய விசேட மாதாந்த சன்மானமும் பெறலாயினர். இக்காலத்தில் அரச நீதிச்சட்டமான பல்வேறு உலகியல்களும் கற்கும் வாய்ப்புங் கிடைத்தது. 1924இல் இவர் விசேடதர துவிபாஷகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

ரைப்பீங்கில் இருந்தகாலை அங்குள்ள சிலோன் அசோசியேசன் ஸ்தாபித்த முக்கியஸ்தர்களுள் ஒருவரும் காரியதரிசியுமாக இருந்தார்.

பத்துக்காசாவில் 27 வருடங்கள் இருந்தகாலத்தில் பொதுநலசேவை விரும்பிகளின் ஒத்துழைப்போடு தமிழர்களுக்கோர் மயானம், மையவண்டி, மயானமடம், வெட்டியான் குடிசை ஆவன உண்டுபண்ணி முறையான பராமரிப்பில் கவனம் செலுத்தி வந்தார்.

தமிழ்ச் சிறுவர்களின் பெற்றேர் ஒருங்கிணைந்து, பிள்ளைகளுக்கு ஆரம்ப தமிழ்க் கல்வி ஊட்டுவதற்கு, வசதியான இடத்தில் சிறிய சங்காற் பாடசாலையும் நிறுவி, அதன் வளர்ச்சியில் கண்ணேட்டமாகவும் இருந்தவர்.

அக்காலத்தில் பெரும்பாலான தமிழர்கள் படிப்பு இல்லாத தென் இந்திய இறப்பர் தோட்டத் தொழிலாளிகள். இவர்கள் கொட்டில் போட்டு முனியாண்டி கும்பிடுவது நடைமுறை. இப்படியான கும்பிடு கொட்டில்களைப் பார்த்து மறு இனத்தவர்கள் ஏளனம் செய்வது வழக்கம். இந்நிலை மாறவேண்டும் என்று திடங்கொண்டு, நண்பர்களின் ஒத்துழைப்போடு, பத்துக்காசா ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலை 1925இல் தொடங்கி, 1928இல் பூர்த்திசெய்து 1929இல் கும்பாபிஷேகமும் முடித்துவைத்தார். இதைத் தொடர்ந்து, காலகதியில், அன்னரின் வரைபடமும் கோவில் வாசிகசாலையில் திரை நீக்கம் செய்யப்பட்டது. "கோவில் மூலக்கல் நாட்டியதின உற்சவம் ஆவணிமாசத்தில் வருகின்ற உத்தராட நட்சத்திர தினத்தில் நடைபெறுகின்றது. "இவ்விழா இச் சிறப்புப் பொருந்திய ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தை ஸ்தாபித்து, இது ஓர் சிரேஷ்ட நிலையில் இருப்பதற்குக் காரணகர்த்தாவாய் இருந்து, காலம்சென்ற திருவாளர் மா.வ. செல்லையா அவர்கள் ஞாபகார்த்தமாய் நடைபெறுகின்றது."—கோவில் வருடாந்த நிர்வாக. அறிக்கை, 1958 — 1960.

"ஆர்குஸ், பத்துக்காசா" (Argus, Batu Gajah) என்னும் புனர் நாமத்தோடு பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவர். தமிழர்களை இழிவு படுத்தும் வகையில் வெளிவரும் கட்டுரைகளை ஆர்வத்தோடு எதிர்ப்பதும், மலாயாவில் உள்ள யாழ்ப்பாணத்தவர் சிலரின் போலி நாகரீகங்களைக் கண்டிப்பதும் இவரது கொள்கை.

ஒரு சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் சிலர் சிங்கப்பூர் உத்தியோகஸ்தர்கள் படிப்பு இல்லாதவர்கள் என்ற பாணியில் நளினம் செய்ததற்கு உடனடியாகப் பதிலடி கொடுக்கையில் ஷெ நளினகாரரை "கிணற்றுத் தவளைகளுக்கு" ஒப்பிட்டு, சிங்கப்பூரார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைகடல் ஓடி யாழ்ப்பாணக் குடும்பங்களுக்கும், கோவில்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் தேடிக்கொடுத்த செல்வாக்கைப் புள்ளிவிபரங்களோடு சுட்டிக்காட்டி, உண்மைநிலைமையை விளங்கவைத்தார். — " Our bread Winners of the east — The Ceylon Patriot 14-3-1911." இன்னுமோர் சந்தர்ப்பத்தில் (17-3-1914) வெள்ளைக்காரத் தோட்டத் துரை ஒருவர் தமிழன் எண்ணெ வழியும் உடம்போடு கள்ளுவெறியில் உடும்பையும் தின்று, தம்பட்டம் அடித்து, ஆடிப்பாடி, துள்ளிக்குதித்து பெண்டீரையும் அடிப்பவன் என்று பிரசுரித்த கவிதை ஒன்றிற்கு அந்தப் பாணியிலேயே மேலைத்தேசத்து கீழ்மக்களின் உணவு, குடிவெறி, கூத்து, விபசாரம் ஆகிய இழிவுகளையும் காட்டி, கண்ணாடி வீட்டில் குடியிருப்போர் கல் எறியக்கூடாது என்ற பதத்தையும் உணரவைத்தார். — " a reply to J. C. A.'s poem entitled — The Tamil — Straits Echo"),

1915இல் வெளிப்பட்ட இந்துசாதன வெள்ளிவிழா மலரில், (Silver Jubilee edition–Hindu Organ), பத்திரிகை தொடங்கிய காலத்தில் நிலவிய சூழ்நிலை, தொடங்கியோரின் தியாகம், ஆற்றல், ஏற்பட்ட முன்னேற்றம் ஆகியன இவரால் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. — (Journalism in its relation to social progress).

மனுக்கள் தயாரிப்பதிலும், அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும் குற்றச்சாட்டுப் பத்திரங்களுக்கு மறுமொழி வகுப்பதிலும் புகழ் பெற்றவர். டாக்டர் படிப்பை மேற்கொள்ளும் நண்பர்களின் பிள்ளைகளுக்கு வேண்டிய லற்றின் ( Latin ) சொல்லிக் கொடுப்பார். — இவை யாவும் நல்ல நோக்கத்தோடு இலவசமாகச் செய்யப்பெற்றவை.

1915இல் கோப்பாயில் திருவாளர் மு. சுவாமிநாதன் அவர்களால் உண்டாக்கப்பட்ட சரஸ்வதி வித்தியாசாலையின் 17 தர்மகர்த்தாக்களில் ஒருவர் என்ற முறையில் இவர் தம் நண்பர்களிடம் கட்டிடநிதி சேர்த்து அனுப்பியுள்ளார். — (Hindu Organ of 9-12-1915).

1919இல் அரசாங்கத்தால் கோப்பாயில் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில் பாடசாலையில் வறிய பிள்ளைகளின் வித்தியா விருத்திக்காக நிதிசேர்த்து இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி உள்ளார். அத்தோடு ஒரு பிள்ளை படிக்கும் செலவைத் தானே தன் அருமைத் தாயாரின் ஞாபகார்த்தமாக அனுப்பி உள்ளார். இது சார்பாக அக்காலத்து வித்தியாதரிசி கௌரவ E. B. டெனும் (Hon'ble E. B. Denham) அவர்களால் அரசாங்கச் சார்பில் நன்றியும் தெரிவிக்கப்பட்டது. — Ceylon Patriot 21-5-1919.

குடும்பத்தைப் பொறுத்தமட்டில், தனது தம்பியார் சுப்பிரமணியம் அவர்களை ஐந்து வருடம் சிங்கப்பூர் மருத்துவக் கல்லூரியில் படிக்கவைத்து, 1912இல் டாக்டராக வெளியேறியதும் (Licentiate in medicine surgery and midwifely) ஐக்கிய மலாய் நாட்டு வைத்தியத்துறை டாக்டராக வேலையாக்கினர். தம்பியாரும் தனது கடமையாக தமையனுக்குப் பக்கத்துணையாய் நின்று அவர் தொட்ட சகல கைங்கரியங்களிலும் பங்குபற்றினர். இப்படியான ஒத்துழைப்போடு, தங்கள் இருவரின் சுகபோகங்களையும் குறைத்து, உடன் பிறந்தோர் குடும்பங்களையும், உட்புகுந்த குடும்பத்தினரையும், பாரபட்சமின்றி, தாங்கி, வாழவைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1920இல் சண்டிலிப்பாய் நடுக்குறிச்சிக் குடி Dr. ஆ. அ. பரராசசிங்க முதலியார் மகள் விஜயலட்சுமி அம்மாளை மணந்துகொண்டனர். அம்மையாரின் தந்தையார் நல்லூர் அரசபரம்பரையினர். தாயார் சண்டிலிப்பாய் வில்லவராச (வில்லவதாச) முதலியார், கொட்டடி வில்லூண்டிப் பிள்ளையார் கோவிலை ஸ்தாபித்த அரசகுலசூரிய முதலியார் ஆகியோர் மரபினராவர்.

இன்னோரின் முன்னோரான நல்லூர் வில்லவராச முதலியார் மகன் வரகவி சின்னத்தம்பிப் புலவரைப் பின்பற்றி, அம்மையார் பத்துக்காசா சுப்பிரமணியசுவாமி பேரில், ஊஞ்சல், எச்சரிக்கை, பராக்கு, வாழி, மங்களம் ஆகிய பதிகத்தை ஆக்கி உள்ளார். இப்பதிகத்தை ''சந்தவின்பமும், சொல்நயமும், பொருள்நயமும் விரவிக் கவிநாயகராகிய குமரக்கடவுள்மீது எவ்வித வலியநெஞ்சும் இளகி நெக்குருகுமாறு அன்புபெருக்கும் பான்மையதாக அம்மையார் அவர்கள் பாடிஉள்ளார்கள்'' என ஈப்போ திருவள்ளுவர் கலாசாலைத் தலைமைத் தமிழ் ஆசிரியர், வண்ணை பண்டிதர் நெ. வை. செல்லையா அவர்கள் தனது முகவுரையில் புகழ்ந்துள்ளார்கள்.

இளம்வயசில் பத்தாவை இழந்து, பதிவிரதாதர்மம் கடைப்பிடித்த இளைய சகோதரி, திருமதி சொர்ணலட்சுமி அம்மாள் சுப்பிரமணியம் நோய்வாய்ப்படலானார். அத்தோடு தங்கள் வயோதிப மாதாவையும் கவனிக்கவேண்டியபடியால், அம்மையார் தாம் மலாயா திரும்பும் நோக்கைவிட்டு, ஊரோடு இருந்து மேலோரின் காவலராக வேண்டிய உதவிகளைச் செய்வாராயினர். இன்னும் இவரின் சகோதர குடும்பங்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒரேவீட்டில் வாழவைத்தவர் இவர். குடும்பத்தில் எவரேனும் சுகவீனமாக இருக்கும் வேளையில் அவர்களைக் கண்ணும்கருத்துமாகப் பராமரிப்பதில் நயிற்றிங்கேலை (Florence Nightingale) ஒப்புடையார்.

மா. வ. செ. அவர்கள், தனது முன்னேற்றத்திற்குக் காரணகர்த்தாவாக இருந்த தாயாரின்மேல் அளப்பரிய அன்பு வைத்திருந்தார். அத்தோடு தாயார் தன் இளைய மகன் சுப்பிரமணியம் டாக்டர் பட்டம் பெற்ற சிறப்பையும், பலாபலனையும் அனுபவிக்கமுன் சௌமியவருடம் சித்திரை மாசத்தில் எதிர்பாராமல் மரித்தது, இவருக்குப் பெருங் கவலையாகும்.

குடும்ப ஒற்றுமை, முன்னேற்றம் ஆகியவையை முன்வைத்து, ஐக்கிய மலாய் நாட்டு அரசாங்க வைத்தியகலாநிதியாகத் துலங்கிய தம்பியார் அவர்களுக்கு, தான் புகுந்த குடும்பத்தில், 1922இல் திருமணமும் செய்துவைத்து, இன்புற்று இருக்கையில், எதிர்பாராதமுறையில் 9-2-28இல் ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக தம்பியார் சடுதி மரணமானது தாங்கொணாத் துயரத்தில் வீழ்த்தியது.

இதைத் தொடர்ந்து அடுத்தவருடம், இவரின் பாரியாரின் சண்டிலிப்பாயில் உள்ள, கிடுகால் வேய்ந்து இருந்த மிக உயர்ந்த பாரிய கல்வீடு, பங்குனி மாச வெய்யில்காலத்தில் தீக்கிரையாயிற்று. இதைத் திருத்தியமைக்க ஏற்பட்ட செலவு அதிகமாகும்.

இப்படியான துன்பங்கள் காரணமாக ஒடுங்கிவாழத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய மலாய்நாட்டு அரசாங்கத்தில் 36 வருட சேவையாற்றி 1936இல் இளைப்பாற்று வேதனம் பெற்று, ஊர்திரும்பும்வேளையில், சுல்தானின் குடும்பத்தவரான ருயா சாலிம் M. C. S. அவர்களின் தலைமையில், பத்துக்காசாவில் உள்ள உத்தியோக நண்பர்களால் ஈப்போவில் உள்ள யூபிலி றெஸ்ரோரனில் ( Jubilee Restaurant, Ipoh ) விமரிசையான பிரியாவிடை விருந்துபசாரம் இவருக்கு அளிக்கப்பட்டது. அத்துடன் தமிழர்களால் அளிக்கப்பட்ட 'பிறிதொரு பிரியாவிடை விழாவில், இனிய தமிழில் மஞ்சள் பட்டில் சிறப்பாக அச்சிட்டு அளிக்கப்பட்ட பிரியாவிடைப் பத்திரத்தில் அன்னாரது குணதிசயங்களும், பொதுச் சேவைகளும் பெருமளவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வந்து மனைவியாரின் ஊராகிய சண்டிலிப்பாயில் குடியாயினர். பத்திரிகை படிப்பதும் குறுக்கெழுத்துப் போட்டி எழுதுவதுமாக அமைதியான முறையில் காலம் கழித்தவர். நெற் செய்கையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

இவர் கோப்பாயிலுள்ள தனது "வாச்சாஒல்லை" என்னும் காணியில் அமைத்த வசதியான வீடு, 1946 அளவில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாகக் கைமாறலாயிற்று. தற்போது இவ்வீடு இவரின் மருமக்களின் பெண்பிள்ளைகள் வசம் உள்ளமை குடும்பத்தினருக்குத் திருப்தி.

1947இல் சுகவீனம் காரணமாக சுமார் இரண்டுமாசம்வரையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைஅளிக்கப்பட்டது, 3-4-47 இரவு 12 மணியளவில் "தடும் முட்டு, தூக்கி நிறுத்துங்கள்" என்று சொல்ல, அப்படியே நிறுத்தி, பாரியார் ஒருபுறமும் அடியேன் மறுபுறமுமாக அணைத்துக்கொள்ள, அம்மையார் கனிந்த மெல்லிய குரலில் அவருக்கு விருப்பம் உள்ள தேவாரம் சொல்ல, டாக்டர் செல்லையா, டாக்டர் தம்பர் இருவரும் கைகூப்பி நிற்க, ஒரு விக்கல் — ஆவி பறிந்தது. வாழ்க்கை முடிந்தது. சரித்துக் கிடத்தினோம். முகம் மலர்ந்தது — நல்ல பதவி தோன்றினாற் போலும்.

மரணச்சடங்குகள் உரியமுறையில் நடைபெற்று சங்கம்புலவு மயானத்தில் தகனக் கிரியைகள் முடிவடைந்தன.

இவரது மரணம் ஏற்பட்ட தினத்தில் பத்துக்காசா சுப்பிரமணியசுவாமி கோவிலில் ஓர் விசேட விழா நடைபெற்றுக்கொண்டு இருக்கையில், ஒருபோதும் நடைபெறுதவாறு, காரணம் தெரியாத முறையில், மின்விளக்குகள் அணைந்தன வென்றும், அடுத்தநாள் மரணத்தந்தி கிடைத்ததும் ஆச்சரியமுற்ற கோவில் காரிய நிர்வாகசபையார், உடனடியாக அங்கத்தவரைக் கூட்டி, அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றி, மோட்ச தீபத் திற்கும் வழி வகுத்தனர் என்பர், அங்கிருந்து வருவோர்.

"ஓர் பெரியோரான யாழ்ப்பாணத்தவர்" (A Great Jaffenese) என்ற தலையங்கத்தோடு இவரின் சரித்திரச் சுருக்கம் 2-5-47 திகதிய இந்துசாதனத்தில் (Hindu Organ) வெளியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா. வ. செ. அவர்களின் அந்தியேட்டி தின நினைவு மலரில் அம்மையாரும் ஒரு பகுதியை ஆக்கி உள்ளார். அப்பகுதியின் இறுதியில் ;

"நற்றவம் செய்திலேன் நாயினுங் கடையேன்
முற்பவ முணர்ந்திலேன் முன்வினை யறியேன்
சற்குணக் குன்றே தலைவனன் ஈசனே
அற்புதக் கோலமே யழைத்திடல் கடனே"

என வேண்டிக்கொண்டபடி அம்மையாரும் விரோதிவருடம் கார்த்திகை மாசத்தில் காலமானூர் (1949).

அன்னாரது தமையனாராய எனது தந்தையாரிடம் 1922 இறுதியில் எனது பராமரிப்புப் பொறுப்பை, அவரும் அவரது அம்மையாரும் மனப்பூர்வமாக ஏற்று மலாய் நாட்டிற்கு அழைத்துச்சென்று அங்கு அன்பாக நடாத்தி, சிறந்த கல்வியும் ஊட்டி, உத்தியோகமும் தேடித் தந்து இறுதியில் கல்யாணமும் தங்கள் செலவில் நடத்தி வைத்த புண்ணியசீலருமானூர்கள். இவ்வாறாக எம்மை ஆளாக்கியதற்கு எனது கைமாறாக அன்னார் ஆஸ்பத்திரியில் இருந்தகாலை, அம்மையாரோடு உடன் நின்று உதவியதும், இருவரின் கொள்ளிக் கடன்களைக் கைக்கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பமும் எனது புண்ணியவசம் என்ற திருப்தியோடு இத் தொகுதியையும் அவர்களின் ஞாபகார்த்த சமர்ப்பணமாகக் குடும்பத்தினர்க்கு அர்ப்பணித்து, பின்னேரையும் இவற்றைப் பேணிக் காத்துப் பயனடையும்படி வேண்டிக்கொள்கிறேன். சுபம்.

83, அரசடி வீதி,
வண். வட—கிழக்கு
யாழ்ப்பாணம், 25-8-87

சி. முத்துத்தம்பி
(பெருமகன்)

# TRANSLATION

*Dutch Records Vol: 2554, folio, 55-58, viz:*

Whereas upon examination of the Title-ola of the Vellale and resident of Kopay Porremonde, **Don Philippu Manamudaliyar** that Ola was found to be entirely genuine; And whereas there was thus proof that he had not obtained that title by indirect means:

So therefore, by reason of the withdrawal of all Title-olas with a view to the prevention of fraud therein concealed, this present Act is granted to the said **Don Philippu Manamudaliyar** under our usual signature and seal of the Company in order that every person may know that that title rightfully belongs to him and that he can and may employ it, and that each and every person must use it towards him.

*Given in the Castle of Colombo in the Island of Ceylon on the 22nd November in the year* 1760.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஸ்ரீலஸ்ரீ மா. வ. செல்லையாபிள்ளை அவர்களின்

## பிரிவை முன்னிட்டு, அன்னவருக்கு வாசித்தளிக்கப்பட்ட

# பிரியாவிடைப் பத்திரம்

**அன்புடையீர் !**

27 வருடங்களாக எங்கள் மத்தியிலிருந்து தாங்கள் செய்துவந்த பொதுநல ஊழியங்களும், சமூகத் தொண்டுகளும் எக்காலத்திலும் எம்மால் மறக்கற்பாலனவன்று. தாம் தங்கள் சிரேஷ்ட குணாதிசயங்களினாலும், மேலான எண்ணங்களினாலும், அரும்பெரும் தொண்டுகளினாலும், வெகுசனப் பிரியரும் இன்மொழிச் செல்வருமானீர்கள். தங்களைத் தாய்முகம் நோக்கும் குழவிபோல மிகவன்போடு பிரீதிகாட்டாத சிறுர்களே இல்லையெனலாம். நும்பிரிவைச் சகிக்கிலோம்! சகிக்கிலோம்!!

இந்த நகரிலுள்ள தமிழ் மக்களின் சிறுர்கள் நந் தாய்ப்பாஷையாகிய தமிழை அதாவது கரையிலாக் கடலாகிய கல்வியைக் கற்றுக்கொள்வதற்காகச் சங்காற் தமிழ்ப் பாடசாலையை நிறுவி அது எஞ்ஞான்றும் தளராது ஓங்கிவர, தாம் ஓத்துழைத்துப் புத்துயிரளித்தீர். அச்செய்கையானது எம்மாலும், எச்சமூகத்தினராலும் மிகவும் போற்றத்தக்கதேயாகும்.

"கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்" என்ற நம் மூதாதையின் அமுத வாக்கைச் சிரமேற்கொண்டு தாங்கள் தங்கள் மித்திரருடன் அளப்பரிய பிரயாசையெடுத்து பத்துக்காஜா ஸ்ரீ சுப்பிரமணியராலயத்தை 1925 வருஷம் முதல் 1928 வருஷம் வரையில் கட்டி முடித்து 1929ஆம் வருஷம் தை மாதம் மகா கும்பாபிடேகத்தையும் நடத்திவைத்தீர்கள். சாதி, மத, தேச, வர்ண வித்தியாசமின்றித் தங்களையறிந்த பத்தர்களின் பொருளுதவியைக்கொண்டு இத்திருப்பணியைப் பூர்த்திசெய்தீர்கள். இதற்காகத் தாங்கள் திரட்டி வெளியிட்டுள்ள "தினசரி உபதேச மொழிகள்" என்னும் நூல் சகலருக்கும் நல்லறிவை ஊட்டுந் தன்மையுள்ளது. மேலும் சைவசமயத்தவர்களுள் ஒற்றுமையையும், சாந்தத்தையும் நிலைநிறுத்தவேண்டியும் இக்கோவிலைச் செவ்வனே நடத்தவேண்டியும் சைவபரிபாலன சபையை ஸ்தாபித்தீர்கள். இச்சபையைக்கொண்டு ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமானாலயத்தைத் தற்போதிருக்கும் மிகத் தேர்ச்சியான உன்னதநிலைக்குக் கொண்டுவந்துள்ளீர்கள். அவையுமல்லாமல் அச் சங்கத்தினர் ஆதிக்கத்தின்கீழ் தமிழ் மக்களுக்கென மயானமும், வாசிகசாலையும், அவை சீரான முறையில் நடத்துவதற்காக ஒவ்வோர் நிர்வாக சபையாரையும் தேர்ந்தெடுத்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் சரீரசிரமம் பாராட்டாது பொது நலமே தங்கள் ஊழியமாக எஞ்ஞான்றும் கருதிச் சகல துறைகளிலும் எடுத்துக்கொண்ட முயற்சிகட்கு இவ்வுலகில் கைமாறே யில்லையெனலாம். ஆலயப் பிரவேசம் பண்ணுங்காலத்து ஜாதிபேதம் பாராட்டாது சர்வஜனங்களும் சமத்துவமாய் உட்புகுந்து கடவுள் தரிசனஞ் செய்ய அனுமதிக்க வேண்டுமென்ற மேலான எண்ணம் தங்கள் மனதிற் குடிகொண்டு ஆலயப்பிரவேசம் செய்யவைத்த புண்ணியசீலரும் தாங்களே!

தங்கள் முற்போக்கான எண்ணங்களும், ஒற்றுமையை நிலவச்செய்யவேண்டுமென்ற உறுதிமொழிகளும், வேண்டிய வேண்டிய நேரங்களில் போதிக்காமல் போதிக்கும் புத்தி சாதுரியச் செய்கைகளும், அன்னியரென்ற பேதங்காட்டாது அவருடன் பேசியானந்திக்கும் அன்புகொண்டிலங்கும் இன்பமதுரமான இரசமொழிகளும், வெகுஜனப் பிரீதியும் தங்களோடுலவிய எங்களை இன்றும் என்றும் பரவசமாக்குகின்றன.

**தேசப்பற்றுடையீர்!**

இவ்வூர் நீதிமன்றத்து முதலியாராய் இருபத்தேழு வருஷம் நடுவுநிலை தவறாது பெரியார் சிறியாரென்றும் தனவந்தர் தரித்திரரென்றும் வித்தியாசமின்றிக் கடமை புரிந்து ஈற்றில் இளைப்பாறித் தாய்நாடேகுகின்றீர்! தங்கள் பிரிவை ஆற்றாது சகிக்கும் எமக்குத் தாங்கள் செய்துள்ள திருப்பணிகளும் அளவிலா முயற்சிகளும் என்றென்றைக்கும் தங்களை நினைவுறுத்தி நம்மை ஊக்கப்படுத்துமென்பதில் சந்தேகமில்லை.

எங்களைப் பிரிந்து தாய்நாடேகும் தாங்கள் நந்தாய்நாட்டிலும் சகல துறைகளிலும் பொலிவுற்று விளங்கத் தங்கட்கு நீண்டகால ஆயுளையும், பரிபூரண நற்சுக வாழ்க்கையையும் கொடுத்தருளுமாறு வேண்டுவார் வேண்டாங்கியும் எல்லாம் வல்ல இறைவனை ஏக மனத்துடன் இறைஞ்சுவோமாக.

இங்ஙனம்,

பத்துக்காஜா — எஞ்ஞான்றும் தங்கள் அன்பை மறவாத

21-6-1936 — **சைவபரிபாலனசங்க அங்கத்தினர்கள்**

சிவபதமடைந்த

# மா. வ. செல்லையா முதலியார் அவர்கள்மேல்

அன்னாரின் அருமைத் தர்ம பத்தினியார்

ஸ்ரீமதி செ. விஜயலட்சுமி அம்மாள் சொல்லிய

## இரங்கற் பாக்கள்

மதிதவழ் செஞ்சடை மலைமகள் பாகன்
விதிவழி யருளிய வித்தக சிரோன்மணி
கதிதரு கருணையி னுருவென வந்தே
பதிபுகழ் பரமன் பதமலர் படர்ந்தாய். 1

அன்னை தந்தையர்க் கருந்தவக் கொழுந்தாய்
அன்புறு சகோதரர்க் கரியமா மணியாய்
இன்புற ஈசனை ஏற்றியே வாழ்ந்து
மன்றமர் மகேசன் மலர்ப்பத மருவினாய். 2

இந்நில மதனில் ஏழையேன் றனக்கு
உன்னுடல் பொருளெலா முவந்தே யளித்தாய்
அன்பினிற் குறையாய் ஆருயிர்க் குயிராய்
இன்புற வாழ்ந்தெனை யேங்கவிட் டகன்றாய். 3

பொன்பொலி வதனமும் புகழ்வெண் ணீறும்
அன்பொடு அருளும் அளிதீஞ் சொல்லும்
மின்னொளி வாயினில் விளங்கிடு பைப்பும்
என்னிரு கண்ணால் இனியும் காண்பனோ, 4

கையினிற் பிரம்புங் காலினிற் செருப்பும்
மெய்யினில் வெண்ணுடை விளங்குகண் ணாடியும்
பொய்யிலாக் கலைகள் கற்றநாற் பொலிவும்
அய்யமென் னடையும் அடியேன் காண்பனோ. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா வென்று மறவா துரைக்கும்
திருநா வுஞ்சிவ சிவாவெனுஞ் சொல்லும்
பெருவா சகமெனுந் திருவா சகமும்
இருகா தொலிக்கும் இன்பமெந் நாளோ! 6

அன்போ டென்னை யழைக்குமின் னிசையும்
பொன்போ லுந்தன் புகழ்திரு மேனியும்
இன்புறு சொல்லும் இனியமென் நகையும்
மன்பொலி யுலகில்யான் மறப்பதற் கரிதே. 7

ஆய்ந்தநூ லறிவும் அற்றவர்க் கருளும்
ஈந்திடு பெருங்குணம் ஈசுர பக்தியும்
வாய்ந்தநற் பொறுமை வாய்மையோ டடக்கம்
தூயநல் வாழ்வும் சொல்லுதற் கரிதே. 8

இகபர மிரண்டினில் என்பழி செய்தனே
இரவலர்க் கிளைத்துநான் இவ்வு டம்பொடு
பகருதற் கரிய பழவினை யாலெனைச்
செகமதில் விட்டுநீ சென்றிடல் முறையோ. 9

நற்றவஞ் செய்திலேன் நாயினுங் கடையேன்
முற்பவ முணர்ந்திலேன் மூள்வினை அறியேன்
சற்குணக் குன்றே தலைவஎன் னீசனே
அற்புதக் கோலமே யழைத்திடல் கடனே. 10

(அந்தியேட்டித்தின வெளியீடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில், பத்துக்காசா
(மலாயா — 1929)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Dr. V. Subramaniam. L. M. S.**
*(1884 — 1928)*
(Malayan Medical Service)



**திருமதி சொர்ணலட்சுமி அம்மாள் சுப்பிரமணியம்**
*(1901 — 1952)*
(Widow)



**திரு. இராமநாதர் சேதுகாவலர்**
*(மரணம் — 1940)*



**திரு. சேதுகாவலர் சேனாதிராசா**
*(1916 — 1974)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Late Dr. V. Supramaniam, L. M. S.

*(1884 — 1928)*

*Kopay — Sandilipay*

**DR. V. Supramaniam, L. M. S.** was the youngest son of Mr. & Mrs. Sinnathamby Vythilingam of Kopay - south. He was born on 21st December, 1884. He was educated at the Kopay - English - School, St. John's College, Jaffna and Hindu College, Jaffna. He was a brilliant student and topped his class at every examination. He passed the Government Eighth - standard Examination in July, 1902 and was awarded a Certificate of merit. In 1904 he got through the Entrance Examination of the Calcutta University. .The Same year, St. John's College presented for the first time students for the Senior Cambridge Examination and in December, one boy was succesful in that Examination, and that was V. Supramaniam. He then followed the 'F. A.' class at the Jaffna Hindu College and after some time Proceeded to the F. M. S. In the F. M. S. his brother M. V. Chelliah found him a place at the King Edward VII Medical School, Singapore. Having completed a five year course, Supramaniam graduated as a Licentiate in Medicine, Surgery and Midwifery in December 1912 and was absorbed into the F. M. S. Medical Service. The General Council of Medical Education in the United Kingdom enrolled Dr. Supramaniam in their Colonial Medical Register on 25th June 1919 - No. 1458.

In 1922 he come down to Jaffna and got married to Sornaletchumiammal daughter of Dr. A. A. Pararajasingha Mudaliar of Sandilipay Nadukuruchi.

After serving in differnt places, he was promoted to the rank of D. M. O. and was placed in charge of the District Hospital, Kajang. Having served in this capacity for three years, he returned to Jaffna on a holiday and stayed at Sandilipay but spent most of his time at Kopay to complete the construction of the family house. On 8th February 1928 he retired to bed by 9-30 p. m. as usual. At about 3 a. m. the following morning he was found struggling for breath in his bed and in about one hour, before any medical aid could be summoned, he succumbed to a very severe heart - attack that had overtaken him.

He was a loving husband, affectionate brother, devoted physician, conscientious Government servant and had a charitable disposition.

His unexpected and untimely death was an unbearable blow for his wife, a calamity for his brother Chelliah, and an irreparable loss for all members of his family. This event was the starting point for the disintegration of a rising family and now, in 1988, it is sad that there is not a single member of this family at Kopay, nay even at Sandilipay, to perpetuate its tradition—a fate ordained?

**S. Muttuthamby**
10-3-88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. வ. சுப்பிரமணியம் L. M. S.

அவர்கள்மேல்

## நவாலி

## திரு. க. சோமசுந்தர உபாத்தியாயர் சொல்லியவை

### கட்டளைக்கலித்துறை

நீரோங்கு நெல்வயற் றென்கோவை மாநகர் நீடுதவச்
சீரோங்கு செல்வப் பெருக்குடை யான்சிவன் சேவடிகள்
ஆரோங்கு மன்பிற் றுதிப்போ னவனி மடந்தையருள்
பேரோங்கு மாரு முதலியென் பான்முற் பிறங்கினனே.

ஊழிக் குலவா துலகினைத் தாங்கி நிதியுதவும்
மேழிக் கொடியுடை மாரு முதலி வியன்மரபிற்
கேளுக் கினியன் வயித்திய லிங்க னெனக்கிளைக்கும்
வேளுக் குவமை மகன்பிறந் தான்நன்மை மேலிடவே.

கங்கைச் சடைமுடிக் கண்ணுதல் பாதங் கருத்திருத்திச்
சங்கைக் குலக்கொடி தன்னை மணந்து தழைத்தவின்பத்
தெங்கும் புகழில் லறநெறி நிற்கு மிவர்மகளுய்
மங்கு னிகர்கொடைச் செல்லைய வேள்வந்து வாய்த்தனனே.

வாய்ந்திடு தாரண மார்கழி யொன்பான் மதிநிறைநாள்
ஆய்ந்திடு மோரையில் நன்மை யுருக்கொண் டருளுமன்புங்
கூர்ந்திடக் கேளிர் குதுகலங் கொள்ளக் குறைதவிர
நேர்ந்திடு சுப்பிர மண்ய னுதித்தான் நிலமிசையே.

கருக்கொண்ட நற்குணங் கூட வளரக் கலைமதிபோல்
உருக்கொண்ட மைந்தன் றவழ்ந்து நடைகற் றுயிரறிவு
மருக்கொண் டொளிர வைந்தாண்டு நிரம்பி மகிழ்ச்சிபொங்கத்
திருக்கொண்ட கல்வித் திருமணங் கொண்டு திகழ்ந்தனனே.

தித்திக்குஞ் சங்கச் செழுந்தமி ழோடு திசையுலவு
புத்திக் கினிக்கின்ற வாங்கில முள்ளம் பொருந்தக்கற்று
சித்திக் கிலக்காய் மலாய்நாடு சீருறு சிங்கைநகர்
மெத்தும் மருத்துவக் கல்லூரி கற்று விளங்கினனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப் பிணியைக் கடியும் மருத்துவ நூற்கழகத்
தாயுங் கலைகளை யாண்டு வரைக்கு மழுந்தக்கற்றுத்
தேயம் புகழும் மருத்துவ நூற்பட்டம் சேரப்பெற்று
நேய முடனிங்கு நற்றொழில் மேவி நிறைந்தனனே.

காசான் மருவு மருத்துவ சாலையிற் கற்றதொழில்
ஆசா னெனவமர்ந் தாங்கிலர்க் கன்றி யடைவரிய
தேசார் சிறப்புடை டி. எம். ஓ. வென்னுந் திருப்பெயரும்
பூசா பலத்தினிற் பெற்றோங்கி வாழ்ந்தனன் புண்ணியனே.

மெய்க்கூலி யாகக் கொடுக்கும் நிதியன்றி வேறுவருங்
கைக்கூலி வேம்பின் கனிபோல் வெறுத்துக் கடிந்தொதுக்கி
எக்கால முந்தொழில் நேர்மைகொண் டெங்கெங்கு மெப்பொழுதும்
பொய்க்கூற் றொழித்த தவநெறி யேகொண்டு போற்றினனே.

ஆரியஞ் செந்தமி ழாங்கிலம் லத்தீ னடையக்கற்றோன்
கூரிய வேற்கும ரற்கொரு கோயில் குயிற்றிவைத்தோன்
நேரிய வத்துக் காசா நகர்வாசன் நிறைபெருகு
சீரிய செல்லைய வேட்கிரு கண்போற் றிகழ்ந்தனனே.

அல்லூருங் கண்டத் தரன்மகன் மேவு மருள்நிறைந்த
நல்லூர் குடிகொண்ட சண்டிருப் பாயின் நயந்திருந்தோன்
மல்லூர் புயத்துப் பரராச சேகர மன்னன்வழிப்
பல்லூர் துதிசெய் பரராச சிங்கன் பயந்தகன்னி

அன்னம் வெருவும் நடையாள் மதிமுகத் தங்கமல
மின்னன்ன பொற்கொடி கற்புடை மெல்லியல் மிக்கபுகழ்ச்
சொன்னம்மை யென்னுந் துடியிடை யாளைச் சுருதிமுறை
மன்னுங் கடிமணங் கொண்டுநல் லாற்றினில் வாழ்ந்தனனே.

தென்புலந் தெய்வம் விருந்தொக்க லெனச் செப்புகின்ற
ஐம்புல மோம்பி யருளும் பொறையு மணிகலமாய்ப்
புன்புலம் போக்கிப் பயனுடை நன்மரம் போற்பொலிந்தான்
அன்புடைச் சுப்பிர மண்யனென் றோது மருந்தவனே.

கூறிடும் மூவிரண் டாண்டில் லறத்திற் குலவிநலம்
ஏறு பிரபவ வாண்டுதை ஓரிரு பான்இருமூன்று
ஈறிலி எந்தை யுமையொரு கூறன் இளமதியும்
ஆறணி செஞ்சடை ஐயன் அருள்கண் டடைந்தனனே.

(அந்தியேட்டித்தின வெளியீட்டிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புக்கள்

1. **மானமுதலியார் :** — Don Philippu Mana Mudaliyar of Kopay Porremonde,— act of appointment dated 22-11-1760—Castle of Colombo—கோப்பாய் தெற்குக் குரிய தமிழ் தோம்பில் மானமுதலியாரும் விசுவர் சிவகாமியும் வசம் "தம்பிக்கு நல்லான் வீடு அரை" என்று உண்டு. டச் தோம்பில் 13 காணிகளில் பங்காளராகவும் காணப்படுகிறார். இவரது பெண் குஞ்சிப்பிள்ளை வசம் "களனிய வத்தை வீடு அரை" எனவும் உண்டு. அக்காலம் நிலவிய பூணூரவரி வகூல் காரண மாக காலத்துக்குக் காலம் சுன்னாகத்து மயிலணியிலும் குடி இருந்தவர். உடுவில் கோவில்பற்று சட்டம்பு இ. வேலாயுதர் 1808இல் எழுதிய சாதனம் ஒன்றில் "உடுவில் கோவில்பற்று சிறைக் கணக்கு பொத்தகத்தில் சுன்னாகம் குறிச்சிக்கு மான முதலியார் பேரிலும் வண்ணார்பண்ணை வெள் சங்கரப்பிள்ளை அம்பலவாணர் பேரிலும் எழுதப்பட்டு வருகின்ற தமிழ் வட சிறை......" எனவும் உண்டு.

2. **வீரகத்தியார் :**— ஓர் செல்வாக்கான கமக்காரர். இவரின் சகோதரி தெய் வானையார், சடங்கு செய்யவில்லை. தனது 20 பரப்புக் கொண்ட "கொத்து வயல்" என்னும் காணியைச் சிதம்பர நடேசருக்குத் தர்மசாதனம் செய்தனர். வீரகத்தியார் மகன் கதிரேசர், மட்டுவில் பூதர் வேலாயுத உடையார் குடும்பத்தில் சடங்கு செய்துகொண்டு உசனில் குடியானார் என்பர். மேல் விபரம் தெரியாது.

3. **பூதாத்தை :**— இவர் டானியல் போதகருக்கு ஒன்றைவிட்ட சகோதரி. புருஷன் சதாசிவமும் போதகரின் சொந்தக்காரர் — Evidence of Rev. George Danial in Land case No. 9412 D. C. J. on 13-10-1913.

4. **ஆபிரிக்கா தம்பையா :**— இளமையில் தென் ஆபிரிக்காவில் உள்ள ரான்சுவாலில் (Transval) போனவர் யுத்தகாலத்தில் (Boerwar 1899—1902) மிலிற்றறிக் கொந்து ரூத்துச் செய்து செல்வாக்கோடு நாடு திரும்பியவர். முதலில் வண்ணை சோ. வீரவாகர் மகள் செல்லமுத்துவையும் இரண்டாம்தாரமாக இலங்கைநாயகமுதலி மகள் பராசக்தியையும் மணந்தார்.

5. **சிதம்பரம் மகன் மயில்வாகனம் :**— வண்ணை தம்பர் மணியம் என்று வழங்கிய கந்தப்பசேகர மணியகாரன் மகன் நமசிவாயம் மகள் தங்கமுத்துவை மணந்தார்.

6. **சிறிதேவன் :**— இவர் வழித்தோன்றல் ஐந்து ஏக்கர் வேலுப்பிள்ளை (வட்டு மேற்கு).

7. **மீனாட்சிப்பிள்ளை :**— இவர் மகன் பரியாரி அப்பா (குமாரசூரியர்), நீராவியடி.

8. **அருளம்பலம் :**— இவர் ஓர் வைத்தியர். பிள்ளைகள்— சிவகுரர் (மான முதலியார்), வே. தங்கச்சியம்மா. சிவகுரரின் பிள்ளைகள்—சுப்பிரமணியம், முத்துக்குமாரு. வே.தங்கச்சியம்மா பிள்ளைகள்—தாமோதரம்பிள்ளை, கந்தையா, சு. செல்லமுத்து, மு. சிவக்கொழுந்து, வைத்திலிங்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய்வனர் மாறு முதலியார் வம்சாவழி

**பொன்னர்** **மார்க்கண்டர் (மார்த்தாண்டர்) டச் தோம்பு—286 &c காலம் 1700க்கு முன் — பின்.**

மூத்தார் — விசுவர் — இலகர் — சின்னப் பெரியார்

குஞ்சிப்பிள்ளை + மாணுமுதலியார் [1]

சிவகாமி + சங்கரப்பிள்ளை

கதிரேசர்

ஆறுமுகம் + வேதவியாழர்

சிதம்பரர்

கந்தர்
பூதர்

பெரியதம்பி
பொன்னர்
சிதம்பரம்
நாச்சிப்பிள்ளை
முத்துக்குமாரு (alias) முத்துத்தம்பி

சுப்பர்

வீரகத்தியார் [2] + சின்னப்பிள்ளை

சுப்பர் + நாச்சிப்பிள்ளை

புன்னுத்தையார் + வேலாயுதர்

சிறீதேவன் + அருணசலம் [6]

மீனுச்சிப்பிள்ளை + சுப்பிரமணியம் [7]

அருளம்பலம் + சின்னத்தங்கம் [8]

சின்னத்தம்பி + நாகமுத்து

வயித்திலிங்கம் +

விசாலாட்சி

பூதாத்தை + சடாசிவம்

சிதம்பரம் + விஞசித்தம்பி

டானியல் போதகர்

சிவகுரர்
வே. தங்கச்சி அம்மா

வயித்திலிங்கம் (வயித்தியநாதர்) + வள்ளியம்மை

ஆபிரிக்கா தம்பையா [4]
தாமோதரம்பிள்ளை

மயில்வாகனம் [5]
த. செல்லம்மா

கனகரெத்தினம் + தங்கமுத்து [9]

சின்னத்தம்பி + பூரணம் [10]

.................. + செல்லம்மா

செல்லம்மா + சேதுகாவலர் [11]

மாணுமுதலியார் செல்லையா + விஜயலட்சுமி அம்மாள்

Dr சுப்பிரமணியம் + சொர்ணலட்சுமி அம்மாள்

மதுரம்மா + E.S. S. அருணசலம்

முத்துத்தம்பி [13] + விஜயம்மா

கனகசபாபதி [16] + சரஸ்வதி

முத்தம்மா + வேலுப்பிள்ளை [12]

இரத்தினம்மா [14] + வேலுப்பிள்ளை

சேனதிராசா [15] + பொன்னுச்சிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை உலகுகாவல முதலியார் வம்சாவழி

**டொன் சுவாம் — சோமசேகர முதலியார்**

சங்கரநாதர்

விஞசித்தம்பி (மொட்டை விஞயர்)

விதானை அருளம்பலம்
சிவகுரர்
வயித்திலிங்கம் + கதிராசிப்பிள்ளை

சிவகாமிப்பிள்ளை + சோ. வீரவாகர்
மூத்துப்பிள்ளை + சோ. தாமோதரம்பிள்ளை
பார்வதிப்பிள்ளை, சின்னத்தங்கம் + சோ. மாணிக்கம்பிள்ளை
ஷை
பொன்னு + சோ. அப்பாப்பிள்ளை
தம்பிப்பிள்ளை + சோ. இளையபிள்ளை —×
ஷை + வி. செல்லம்மா (கோப்பாய்)
பொன்னம்பலம் + வ. அன்னமுத்து (இலகடி)
கந்தையா + சி. தங்கச்சி (கோப்பாய்)

**சின்ன உலகுகாவல முதலியார்**[11]
+ மாஞமுதலியார் சகோதரி (கோப்பாய்)

விஞயர்

வயித்தியநாதர்

சடாசிவம் + வீ. பூதாத்தை
விஞசித்தம்பி + வீ. சிதம்பரம்
சின்னத்தங்கம் + மு. அருளம்பலம்[8]
நாகமுத்து + மு. சின்னத்தம்பி

சுவாமிநாதர்

சிவகாமிப்பிள்ளை + சபாபதிப்பிள்ளை

சிவகுருநாதர் + சிவசுந்தரவல்லி

இராசதுங்கம்
உ. சோமசேகரம்
சீ. சிவகாமிப்பிள்ளை

குமாரவேலர்

சுப்பிரமணியர் + மீஞச்சிப்பிள்ளை

பரியாரி அப்பா (நீராவியடி)

**கோபாலர்**

சங்கரப்பிள்ளை

சண்முகம்

வள்ளியம்மை + பிறவுண்–சின்னத்தம்பி

வள்ளிப்பிள்ளை + குமரஉடையார் (கோப்பாய்)

அம்பலவாணர் + நாச்சிப்பிள்ளை (சுன்ஞகம்)

சிவகுருநாதர் + தெய்வானை

கமலம்

வெய்க்கட்டைப் பொன்னர்

வயித்திலிங்கம் + வள்ளியம்மை (கோப்பாய்) — சகோதர முறையினர் — இந்துமதி + வீரசிங்க உடையார் (நீர்வேலி)

கனகரெத்தினம் | சின்னத்தம்பி | சே. செல்லம்மா | மாஞமுதலியார் செல்லையா | Dr. சுப்பிரமணியம், L. M. S.

பிறக்ரர் அரிச்சந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. **கனகரத்தினம்** :— சிங்கப்பூரில் இறப்பர் தோட்ட கண்டாக்டராக இருந்தவர்.

10. **சின்னத்தம்பி** :— ஊரோடு இருந்து கமத்தையும் குடும்ப நலத்தையும் கவனித்து வந்தவர்.

11. **சேதுகாவலர்** :— இவர் கோவிலாக்கண்டியில் குடியரசாண்ட தேவராசேந்திரன் வம்சத்தவர். கோப்பாய் ஊர் முன்னைநாள் கிராமச்சங்க அங்கத்தவராகவும் இருந்தவர்.

12. **வேலுப்பிள்ளை** :— ஐக்கிய மலாய்நாட்டில் விசேடதர போஸ்ற்மாஸ்றராக இருந்து இளைப்பாறியவர்.

13. **முத்துத்தம்பி** :— யாழ்ப்பாண மாநகரசபையில் லிகிதராகவும், பின் உதவி காரியாலய அதிகாரியாகவும் (O. A.) இருந்து இளைப்பாறியவர்.

14. **இரத்தினம்மா** : – சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியையாகத் தேர்ச்சி பெற்று கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலையில் கடமையாற்றி இளைப்பாறியவர்.

15. **சேனாதிராசா** :— இலங்கை புகையிரதப்பகுதி பாதுகாப்புச்சேவையில் பொறுப் பதிகாரியாக இருந்து இளைப்பாறியவர்.

16. **கனகசபாபதி** :— இலங்கை நீர்ப்பாசன இலாகாவில் உயர்தர படம் வரைபவ ராக இருந்து இளைப்பாறியவர்.

17. ஷெ சின்ன உலகுகாவல முதலியார் பூதத்தம்பியின் பின் மந்திரியாய் இருந்த உலகுகாவலமுதலியார் வழித்தோன்றல் ; டொன்சுவாம் சோமசேகர முதலியார், கோபாலர் ஆகியோரும் இவ்வழியினரே.

18. இதிகாசகாரர் C. S. நவரத்தினமவர்கள் (நவாலி) மா. வ. செ. வையும் அவர்கள் சாமர்த்தியத்தையும் தனது சிறிய வயதில் இருந்து நன்கு அறிந்தவர். இவரின் " யாழ்ப்பாணத்து நூறு பெரியோர்கள் " (One hundred great men of Jaffna) என்னும் தொகுப்பில், மா. வ. செ. அவர்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட்டது. ஆனால், நவரத்தினமவர்கள் எதிர்பாராத வகையில் சடுதி மரணமானதின் விளைவாய் இத்தொகுப்பு இன்னும் அச்சிடப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>அநுபந்தம்</u>

# திரு. சி. முத்துத்தம்பி அவர்கள்
# சேவைப் பாராட்டு
## யாழ்ப்பாணம் மாநகரசபை
### மாதாந்தப் பொதுக்கூட்டம்
## 22-4-69

18. 29-4-69இல் இருந்து இளைப்பாறும் திரு. எஸ். முத்துத்தம்பிக்கு இளைப்பாற்றுச் சம்பளமும், உணவுப் படியும் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

திரு. எஸ். முத்துத்தம்பிக்கு 29-4-69 முதல் வருடாந்தம் ரூபா 2343-51 (அடிப்படை) இளைப்பாற்றுச் சம்பளம் வழங்குவதைச் சிபாரிசு செய்வதென்றும், அவரது இளைப்பாற்றுச் சம்பளம் இறுதி முடிவு செய்யும்வரை மாதாந்தம் ரூபா 250/- உணவுப் படியாக வழங்குவதை அனுமதிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் திரு. எஸ். முத்துத்தம்பி அவர்களின் சேவையைப் பாராட்டி மேயர் பின்வரும் பிரேரணையைப் பிரேரித்தார்.

" திருவாளர் சி. முத்துத்தம்பி அவர்கள் யாழ்ப்பாண மாநகரசபையிலும் இதற்கு முன்பிருந்த பட்டினசபையிலுமாக 1937ஆம் ஆண்டிலிருந்து 32 ஆண்டுகளாகத் தொடர்ந்து சேவையாற்றியுள்ளார். இக்காலப் பகுதியிலே அவர் நான்கு தலைவர்கள், நகராட்சியாணையாளர்கள் ஏழுபேர், நகரசபை முதல்வர்கள் ஆறுபேர், இன்னும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் தலைவருட்பட விசேஷ ஆணையாளர்கள் ஆறுபேர் ஆகியோருக்குக் கீழே கடமையாற்றியுள்ளார்.

உள்ளூராட்சி, மாநகரமன்ற நிர்வாகம் என்பன சம்பந்தமான சட்டங்களிலேயுள்ள ஒவ்வோரம்சத்தையும் ஆராய்ந்து கற்றுத் தெளியவேண்டுமென்ற பேரவா வுடையவ ராகவே இவர் என்றும் விளங்கி வந்துள்ளார். இதனல் நிர்வாக சம்பந்தமாக மட்டு மன்றி சட்ட நுணுக்கங்களிலே சிக்கல்கள் தோன்றும்போது ஆணையாளர்களும் மாநகர முதல்வர்களும் அடிக்கடி இவருடைய அபிப்பிராயத்தைக் கோரிப் பயனடைந்துள்ளனர்.

உள்ளூராட்சிச் சேவையிலே பதவியுயர்வுகளுக்கும் தகுதிகாண் பரீட்சைகளுக்கும் ஆயத்தம் செய்பவர்களுக்கு உபயோகப்படத் தக்க வகையில் உள்ளூராட்சி அதனோடு தொடர்புடைவனவான சட்டங்கள் பற்றிய சுருக்கக் குறிப்புக்கள் யாவற்றையும் திருவாளர் முத்துத்தம்பி தொகுத்து வைத்துள்ளார். உள்ளூராட்சி நிர்வாகசேவை எழுதுவினைஞர் சேவையிலே ஊக்கம் கொண்ட பலரும் இத்தொகுப்பைப் பயன்படுத்தி யுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகக் கட்டிட ஒப்பந்தக்காரருக்கும் இம்மாநகர சபைக்குமிடையில் நிகழ்ந்த மத்தியஸ்த நிகழ்ச்சிகளில் இவருடைய சட்ட நுணுக்க அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் பயன்பட்டது. அரசாங்க மின்சாரத் திணைக்களத்திடம் இம்மாநகரசபை மின் சாரத்தைத் தொகையாக வாங்குவது, அது சம்பந்தமாக இச்சபைக்கு ஏற்படும் நட்டம் ஆகிய விஷயங்களிலுள்ள பல அம்சங்களையும் விரிவாக ஆராய்ந்தறிந்து கொண்டதோடு நகரசபை முதல்வர்களுக்கும் மின்சாரப் பகுதி அமைச்சருக்குமிடையில் காலத்துக்குக் காலம் நிகழ்ந்த மாநாடுகளில் மிக நெருங்கிய தொடர்பும் கொண்டு வந்துள்ளார்,* மாநகரசபையின்பால் இவர் கொண்டுள்ள சீர்பாடு மிகவும் போற்றத்தகுந்ததெனலாம்.

இவருடைய சேவை பெரும்பாலும் கணக்குப் பகுதியுடனேயே சம்பந்தப்பட்டது. அதிலும் செலவினம் வரவுசெலவுத்திட்டத் தயாரிப்பு ஆகியவை இவருடைய பொறுப்பி லமைந்த பிரதான விஷயங்களாகும். தமது கண்காணிப்பிலே உள்ள செலவினம் ஒவ் வொன்றையும் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்து வந்தது மாத்திரமின்றி இப் பொழுது சபையின் நடைமுறையில் பயின்று வருவதான எல்லா அம்சங்களையும் உள் ளடக்கி அவற்றின் செலவுமுறை விபரங்களையும் கொண்ட வரவுசெலவுத் திட்ட அமைப்பைப் புகுத்துவதற்குக் காரணமாயிருந்தவரும் இவரேயாவர். கணக்காளர் பதவி நிரப்பப்படாதிருந்த ஆறுமாத காலத்தில் இவரே பதில் கணக்காளராகக் கடமையாற்றி யுள்ளார். இன்னும் விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகம் நடைபெற்றபோது திருவாளர் முத்துத்தம்பி அவ்விசேஷ ஆணையாளர்களுக்குக் காரியதரிசியாகவும் பணியாற்றி அவர்க ளுடைய நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் பாத்திரமானுர்.

இவருடைய ஆற்றலையும் உயர்ந்த சேவையையும் மதித்து இவருக்காகவே உள்ளூ ராட்சி எழுதுவினைஞர் சேவையில் சிறப்புப் பதவியொன்றை இம் மாநகரசபையில் முதல் முதலாக உருவாக்கித் திருவாளர் முத்துத்தம்பி அவர்கள் காரியாலய உதவி யதிகாரி என்ற பெயரோடு அப்பதவிக்கு உயர்த்தப்பட்டார். இவ்வுயர் பதவியிலிருந்தே அவர் ஓய்வு பெறுகிறுர்.

மாநகரசபைக்கு எது சிறப்பைத் தருமோ அதுவே அவருடைய நடைமுறை. அவர் விசுவாசம் பூண்டு நடந்தது முதல்வருக்கேயன்றி முதல்வர் பதவியை வகிப் பவருக்கல்ல. முதல்வர்களும் ஆணையாளர்களுமாகப் பலர் அவருடைய பெருமைகளை மெச்சிப் புகழ்ந்தே வந்துள்ளனர். திருவாளர் முத்துத்தம்பியை இம்மாநகரசபையின் மதிப்பு மிக்கதொரு பொக்கிஷம் என்ற கருத்து சபை முதல்வர்கள் யாவருக்கும், அவர்கள் பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், எப்போதுமிருந்து வந்திருக்கின்றது. இவருடைய நேர்மைக்கும் சீரிய பண்புக்கும் எந்தச் சமயத்திலும் பங்கமேற்படவில்லை.

திருவாளர் முத்துத்தம்பியவர்களுடைய சேவையைப் பாராட்டிக் கூறிய இவை யாவும் இம்மாநகரசபையின் அறிக்கையில் பதியப்படுவதோடு அதன் பிரதிகள் உள்ளூ ராட்சிச் சேவை ஆணைக்குழுவுக்கும் அனுப்பப்பட வேண்டுமென்றும் நான் பிரேரிக்கின் றேன். திருவாளர் முத்துத்தம்பிக்கும் இதன் பிரதியொன்றை அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.''

பிரேரணை சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

* இறுதியில் சபைக்கு அனுகூலமாக ரூபா 688,512/- கழிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org